

பாமாலை 447 பூவின் நல் வாசம்

1 பூவின் நல் வாசம் வீசும் சோலையாயினும்,

நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்,

இயேசு நாதர் பின் சென்றேகி மோட்சம் நாடுவேன்

விண்ணில் சூடும் கிரீடம் நோக்கி ஓடுவேன்

2 கார் மேகம் மேலே மூடும் பள்ளமெங்கிலும்

காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்

இயேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவே மாட்டேன்;

ரட்சகர் கைதாங்கத் தைரியம் கொள்ளுவேன்

பல்லவி

பின் செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே!

எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்

பின் செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே!

இயேசு காட்டும் பாதை எல்லாம் செல்லுவேன்.

3 நாள் தோறும் இயேசு நாதர் கிட்டிச் சேருவேன்,

மேடானாலும் காடானாலும் பின்னே செல்லுவேன்

மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்,

விண்ணில் தாசரோடு சேர்த்து வாழ்விப்பார்.